2006 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், இருக்கையில் இல்லை.

வினா எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

97—

நீதிமன்றம்

***1993—திரு. பி.என். பெரியண்ணன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

தருமபுரியில் முதன்மை அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் முதன்மை அமர்வு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு, 2006–2007, பகுதி–2 திட்டத்தின்கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட செயற்குறிப்பு, பகுதி–2 திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

திரு. பி.என். பெரியண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில், முதன்மை அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரியை இருப்பிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்தது. அப்போது தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பல அமைப்புகள் போராடி, எங்களுக்கு இந்த நீதிமன்றம் கிடைக்காத நிலைமையிலே, இப்போது அரசு அதைச் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் திட்ட மதிப்பீடு ரூ.88.93 இலட்சத்திலே தயார் செய்யப்பட்டு, அரசுக்கு வந்திருக்கின்றது. பகுதி–2 திட்டத்திலே, 2006–2007 ஆம் ஆண்டிலே, முன்னுரிமை அடிப்படையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்திலே சேர்க்கமுடியவில்லை. வருகின்ற ஆண்டிலே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நான்காவது முறை முதல்வராக இருந்தபோது, 2000 ஆம் ஆண்டு இறுதியில், இதே அவையில், தருமபுரியில் அமர்வு நீதிமன்றம் அமைப்பதற்கான அறிவிப்பைச் செய்தார்கள். கடந்த 5 ஆண்டுக் காலமாக நாங்கள் போராடியும், நீதியும் கிடைக்கவில்லை, நீதிமன்ற அமைப்பும் எங்களுக்கு உருவாக்கப்படவில்லை. 'கேளுங்கள் தரப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற நிலையில், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசு, இந்த ஆண்டு நிதிநிலைப் பற்றாக்குறையைக் காரணம் காட்டாமல், கோடிக்கணக்கான ரூபாயில் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கியிருக்கிற கலைஞருடைய அரசு, தருமபுரி மாவட்ட மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில், இந்த ஆண்டே நீதிமன்றம் தொடங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, வருகின்ற நிதியாண்டிலே நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் Consumer Courts–நுகர்வோர் நீதிமன்றங்களில் பல இடங்களில், நீதிபதிகள் இல்லாத குறைகள் இருக்கின்றன. அவர்களை நியமிப்பதற்கு, இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்பவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில், 10 ஆண்டுகளுக்கு முன்பு, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பலமுறை மனுக்கள் கொடுக்கப்பட்ட பிறகும், இன்றுவரையில் அதற்கான ஒரு தீர்வு இல்லாமல் இருக்கிறது. ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2006 ஆகஸ்ட் 25]

முற்பகல் 10–00

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாலே ஒரு பொதுத் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, நிதியை மாநில அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய நிதி வந்தவுடனே நிச்சயமாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுகின்ற பணி தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் அமர்வு நீதிமன்றம் துவங்குவது குறித்து அமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டில் ஆலோசிக்கப்படும் என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். தருமபுரி என்பது மாவட்டத்தினுடைய தலைநகரம். மாவட்டத் தலைநகரில் இருக்க வேண்டிய அமர்வு நீதிமன்றம் கடந்த காலங்களில் மாவட்டம் பிரிக்கப்படாத சூழ்நிலையிலும்கூட கிருஷ்ணகிரியிலே இயங்கி வந்தது. அன்றைய காலக்கட்டத்திலிருந்து தொடர்ந்து போராடி வருகிற வழக்கறிஞர்கள், அரசியல் கட்சிகள் எல்லாம் இருந்தாலும், அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு, மாவட்டத் தலைநகரில் இருக்க வேண்டிய அமர்வு நீதிமன்றம் இல்லாதது பெரும் குறையாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில், அந்த மாவட்டத்திற்கும் நீதி கிடைக்கிற வகையில், நீதிமன்றம் நடப்பாண்டிலே தொடங்குவதற்கு, அரசு முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்தி, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருகிற ஆண்டிலே நிச்சயம் நிவர்த்தி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98, திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

98—

மாவட்ட விளையாட்டு அலுவலகம்

***490—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—